Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி · PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 23 09-11-94 புதன்கிழமை ஓசை 264

## மண்டைதீவுக் கடற்பரப்பில் ஆறு மீனவரைக் காணவில்லை

குருநகரில் இருந்து மண்டை தீவுக்கு அப்பால் மீன்பிடிக்கச் சென்ற இரு மீன்பிடி வள்ளங்களும் அவற்றில் சென்ற ஆறு மீனவர்களும் திரும்பி வரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த ஞாயிறு மாலை மீன் பிடிக்கச் சென்ற இவர்கள் நேற்று மாலை இச்செய்தி எழுதப்படும் வரையில் திரும்பவில்லை. குருநகர் றெக்கிளமேசனைச் சேர்ந்தவர்களான இராசரெட்ணம் றெஜின் (வயது 18), சிங்கராசா றொபின் (வயது 23), அல்வின் யோண்சன் (வயது 18),

(6ஆம் பக்கம் பார்க்க)

# வெற்றிலைக்கேணியில் துணிகர தாக்குதல்; தரையிறக்கும் போர்க்கப்பல் பாரிய சேதம்

## பாதுகாப்பை ஊடறுத்து கடற்கரும்புலிகள் சாதனை

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள வெற்றிலைக்கேணி கரையோரத்தில் கடற் கரும்புலிகள் மேற்கொண்ட துணிகரமான தாக்குதலில் சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான 'படைகள் தரையிறக்கும் போர்க் கப்பல்' - லாண்டிங் கிறாப் - ஒன்று பாரிய சேதத்திற்குள்ளானது. நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட இவ் வெற்றிகரமான தாக்குதலின் போது கடற்படையினருக்குப் பலத்த உயிர்ச்சேதமும் ஏற்பட்டிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று அதிகாலை 12.26 மணிக்கு கடற்கரும்புலிகளால் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

வெற்றிலைக்கேணி இராணுவ முகாமிற்கு ஆயுத தளபாடங்களை கரையோரத்தில் இக் கப்பல் இறக்கிக் கொண்டிருக்கும்போதே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிற்குள் உள்ள இத் தரையிறக்கும் பகுதிக்குள் வெற்றிகரமாக ஊடுருவி முன்னேறிய கடற்கரும்புலி இத் தாக்குதலை நடத்தி முடித்தார்.

இக் கப்பலானது ஆழம் குறைந்த கரைப் பகுதியில் பொருட்களை இறக்கிக் கொண்டிருந்த வேளை தாக்கப்பட்டமையினால் கப்பல் பலத்த சேதத்திற்கு உள்ளாகியபோதும் முற்றாக நீரினுள் அமிழும் சாத்தியம் குறைவாகவே உள்ளதெனத் தெரியவருகின்றது.

கடந்த ஒருமாத காலப் பகுதிக்குள் இப் பகுதியில் கடற்புலிகள் மேற்கொண்ட இரண்டாவது வெற்றிகரமான தாக்குதல் இதுவாகும்.

இதேவேளை நேற்று அதிகாலை இடம்பெற்ற கரும்புலித் தாக்குதலின்போது சிறிலங்கா கடற்படை மற்றும் இராணுவ தரப்பில் பலத்த உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது. இருப்பினும் இது குறித்த தெளிவான தகவல்கள் வெளிவரவில்லை.



வெற்றிலைக்கேணியில் வீரசாதனை படைத்த கடற் கரும்புலி மேஜர் வித்தியுடன், தேசியத் தலைவர் வே. பிரபாகரன்.

## காவலுக்கு நின்ற டோறாக்கள் கடற்புலிகளால் விரட்டியடிப்பு

### 3 மணிநேர சமரென சிறிலங்கா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் படையிறக்கும் போர்க்கப்பல் மீது கடற்கரும்புலிகள் தாக்குதல் நடத்த முற்பட்டவேளை அக்கப்பலுக்குக் காவலாகநின்ற 'டோறா' அதிவேகப் படகுகளுக்கும் கடற்புலிகளுக்கும் இடையில் கடும் கடற்சண்டை மூண்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இம்மோதலின்போது வெற்றிலைக்கேணி இராணுவ

(6ஆம் பக்கம் பார்க்க)

### மேஜர் வித்தியின் உருவப்படம்

வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் தரையிறக்கும் கப்பலைத் தாக்கி வீரசாதனை படைத்த கடற் கரும்புலி மேஜர் வித்தியின் உருவப் படம் இன்றைய ஈழநாதத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

## படகுச் சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறுமென அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## கடற்கரும்புலி மேஜர் வித்தி வீரச்சாவு

வெற்றிலைக்கேணிக் கடற்கரையில் நேற்று அதிகாலை தரையிறக்கும் போர்க்கப்பல்மீது மேற்கொள்ளப்பட்ட கரும்புலித் தாக்குதலில்,

கடற்கரும்புலி மேஜர் வித்தி

(சந்தணம் யோகேஸ்வரன் குடாரப்பு நாகர் கோவில்) வீரச்சாவடைந்தார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## வடமராட்சி கிழக்கில் அகோரக் குண்டுவீச்சு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு மக்கள் குடியிருப்புக்கள் மீது சிறிலங்கா குண்டு வீச்சு விமானங்கள் நேற்று அகோரத் தாக்குதலை மேற்கொண்டன.

வெற்றிலைக்கேணி கடற் பகுதியில் வைத்து சிறிலங்கா இராணுவத்தினரின் லாண்டிங் கிறாப் மீது கடற்கரும்புலிகள் தாக்குதல் நடத்தியதை யடுத்து குடியிருப்புகள் மீது பலத்த தாக்குதல்கள் நடைபெற்றன.

உடுத்துறை, தாளையடி, வேம்படி பகுதிக் குடியிருப்புகள் மீதுகடும் தாக்குதல்நடைபெற்றது. இப்பகுதிக்கு வந்த இரண்டு பொம்பர்கள் ஒரு அவ்ரோ, உலங்குவா னூர்தி, என்பன இக்குடியிருப்புகள் மீது மாறி மாறி தாக்கின. ஒரு மணிக்கு வந்த விமானங்

(6ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்காவில் இன்று 3-வது ஜனாதிபதித் தேர்தல்

(கொழும்பு)

சிறிலங்காவின் மூன்றாவது ஜனாதிபதி தேர்தல் வாக்களிப்பு இன்று காலை 7மணிக்கு ஆரம்பமாகின்றது மாலை நான்கு மணிவரை தேர்தல் வாக்களிப்பு நடைபெறும். ஒருகோடி எட்டு லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர் இதற்கென 9580வாக்குச் சாவடிகள் 22மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளன

இம்முறை ஜனாதிபதி தேர்தல வாக்குச் சீட்டில் வேட்பாளர்கள் ஆறுபேரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தாலும் முற்போக்கு முன்னணி எனும் ஜே வி பி சார்பு கட்சியின் வேட்பாளர் நிஹால் கலபதி தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து வாபஸாகி உள்ளமை குறிப்பிடத்

(6ஆம் பக்கம் பார்க்க)


## தேர்தலின் பின் வன்முறை மூளலாம் ஹமில்டன் - பிராங்டிசில்வா ஆராய்வு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலையடுத்து தென்பகுதியில் ஏற்படக்கூடிய வன்முறைகள் குறித்து பொலிசாருக்கு பல தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் இதனை தடுத்து நிறுத்துவதற்கான வழிவகைகளை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வனசிங்காவும் பொலிஸ் மாஅதிபர் பிராங்டி சில்வாவும் கூடி ஆராய்ந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கலவரங்களைத் தடுத்து நிறுத்த பெருமளவு பொலிசாரும் இராணுவத்தினரும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் அவ்

(6ஆம் பக்கம் பார்க்க)



வெற்றிலைக்கேணியில் கடற் கரும்புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகியதுபோன்ற தரையிறக்கும் போர்க்கப்பலிலிருந்து டாங்கிகள் தரையிறக்கப்படுவதை மேலுள்ள படத்தில் காணலாம்.

# வரி விளம்பரம்

**11.11.94 இல்**
**வியாழ மாற்றம்**

[11-11-94] சந்திரிகா ஜனாதிபதியாக அமோக வெற்றிப் பிரகடனமும் (11-11-94) வியாழ மாற்றத்தால் அமைதியும் சமாதானமும் நிலவும் வியாழ மாற்றம் ரூ10/- எங்கும் கிடைக்கும் நூலாசிரியர் சத்யா சோபிதா புத்தகசாலை, யாழ்ப்பாணம்
(10010)

**பாலர் ஆசிரியராக சந்தர்ப்பம்**

பயிற்சியிக சேர சந்தர்ப்பம் சடைசித் தசைமை க-பொ-த (சா/த) சனி, ஞாயிறு கற்க முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம்- பாலர் ஆசிரியர் சங்கம் மே/பா உயர் கலைக்கல்லூரி ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்- [9998]

**தவறிவிட்டது**

இக்னேஷியஸ் விவேகானந் தன் ஆகிய எனது 722352 769V இலக்க அடையாள அட்டை செட்டித்தெரு குறுக்கு ஒழுங்கையில் 27-10-94 இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும்-
(10006)

**விற்பனைக்குண்டு**

பூச்சி நீக்கப்பட்ட 2மாத பொமரேனியன் பிறவுண், சாம்பல் நிற ஆண்,பெண் குட்டிகள் விற்பனைக்கு உண்டு தொடர்பு: கிருஷ்ணசாமி பழைய றோசாத் தோட்டம் தலங்காவல் பிள்ளையார் கோவில் அருகாமை திரு நெல்வேலி கிழக்கு [10019]

## பாராட்டுபசாரம்

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் பணியாற்றி ஓய்வு பெற்ற அதிபர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் வைபவம் நாளை வியாழக்கிழமை பி.ப: 2 மணிக்கு சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தில் கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும்.

சண்டிலிப்பாய் கோட்டப் பாடசாலை அதிபர்கள் சங்கம் இதனை ஏற்பாடு செய்துள்ளது.

## விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மல்லாகம் பகுதியில் வான் ஒன்றுடன் விபத்திற்குள்ளானவர் தலையில் காயமடைந்து மயக்கமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று நடைபெற்ற இவ் விபத்தில் சிக்கியவர் இராசையா ரதீஸ்வரன் (வயது 12) என்பவர் ஆவார் (இ)

## சேவை நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

புதிய அரசினால் யாழ். செயலகத்தில் இருந்து ஓய்வு பெறுமாறு அறிவிக்கப்பட்ட ஆறு பேருக்கும் தொடர்ந்து சேவையாற்ற உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த மாதம் ஏழாம் திகதியில் இருந்து இவர்களை ஓய்வு பெறுமாறு உள்நாட்டு அலுவல்கள். மாகாண சபைகள் அமைச்சு யாழ். செயலகத்திற்கு முன்னர் அறிவித்திருந்தது.

எனினும் இவர்கள் அடுத்த மே மாதம் வரையே தொடர்ந்து கடமையாற்ற அனுமதிக்கப்பட்டுள்ளதாக அறியவருகின்றது:
(பா),(தி)

## இரண்டாம் ஆண்டின் நிறைவு நினைவாக.....



மண்ணக வாழ்வில்:-
16-07-1974

விண்ணக வாழ்வில்:-
09-11-1992

**கப்டன் மதியழகன்**
**(நடராசா றஜீஸ்குமார்)**

தமிழீழம் காண்பது உறுதிஎன்றாய்
தலைவர் பாதையும் இதுவே என்றாய்
தமிழீழம் காணுமுன் முடிவும் இதுவோ
ஆண்டு இரண்டானாலும் ஆறவில்லை எம்துயரம்

குடும்பத்தினர்

அல்வாய் கிழக்கு,
அல்வாய்
(10017)

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
24-08-1973

தாயக மண்ணில்
09-11-1990

**லெப்டினன்ட் நவாஸ்**
**(இராசரத்தினம் சுதானந்தன்)**

எம் கண்களிலோ உன்முகம் கனவிலுமோ உன்நினைவு
நீ-முந்தைய தமிழீழ ஆட்சியை மீட்கவே போர்க்களம் சென்றாய்
சொந்தமண்காத்திட ''நவாஸ்'' எனும் நாமமும் சூடினாய்
அந்த மண்ணிற்கே விதையானாய் ஏங்கிய விழிகளில் நீரைச்
சொரிகின்றோம் எம் உடன்பிறப்பே - நீ தாங்கிய கனவினைச் சுமந்து
வாழ்கின்றோம் இம்மண்ணிலே மைந்தனே!

அப்பா, அம்மா,
அண்ணன்மார், அக்கா,
அத்தான், தங்கை

''நவாஸ் வீதி'
கைதடி மேற்கு
கைதடி:
(10009)

## யாழ்ப்பாண மாநகரசபை
# கேள்வி அறிவித்தல் 1995

01. இதன்கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையங்கள் உட்பட சந்தைகள், இறைச்சிக்கடைகள், கோழிக்கடை ஆகியவற்றை இவ் அட்டவணையில் குறிப்பிடப்படும் காலங்களுக்கு 01-01-1995 முதல் குத்தகைக்கு கொடுப்பதற்கென அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் என்னால் 25-11-94 வெள்ளிக்கிழமை நண்பகல் 12 00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.
02. கேள்விப்படிவங்கள் குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப் பிணையும் கேள்விப்படிவக்கட்டணமான ரூபா 100/- உம் செலுத்துவதன் பேரில் 24-11-94 வியாழக்கிழமை பிற்பகல 3.00 மணிவரையும் யாழ்ப்பாண மாநகரசபையால் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான படிவங்களில் இணைப் பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப்படிவங்கள் யாழ்ப்பாண மாநகரசபையில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் சேர்க்கப் படல் வேண்டும். அல்லது பதிவுத்தபால் மூலம் யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளருக்கு 25-11-94-ம் திகதி நண்பகல் 12.00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக சேர்க்கப்படல் வேண்டும்.
03. தபாலில் அனுப்பப்படும் பட்சத்தில் விநியோகத்தில் ஏற்படும் தாமதத்துக்கு மாநகரசபை பொறுப்பேற்கமாட்டாது.

**அட்டவணை**

| 4. குத்தகைவிபரம் | குத்தகை காலம் | கேள்விப் பிணை | நிர்ணயிக்கப்பட்ட ஆகக்குறைந்த கேள்வித்தொகை | மாத வாடகை |
|---|---|---|---|---|
| 1. பெரிய கடைமரக்கறி சந்தை | 1 வருடம் | 5000.00 | 75000 00 | |
| 2. குரு நகர்சந்தை | 1 வருடம் | 5000.00 | 125000.00 | |
| 3. செங்குந்தாசந்தை | 1 வருடம் | 5000.00 | 200000.00 | |
| 4. நாவாந்துறை சந்தை | 1 வருடம் | 2500.00 | 40000.00 | |
| 5. பாசையூர்சந்தை | 1 வருடம் | 2500.00 | 30000 00 | |
| 6. கொட்டடி சந்தை | 1 வருடம் | 500 00 | 1000 .00 | |
| 7. அரியாலைசந்தை | 1 வருடம் | 1000 00 | 15000.00 | |
| 8. கொழும்புத். சந் | 1 வருடம் | 500.00 | 1100.00 | |
| **இறைச்சிக்கடைகள்** | | | | |
| **1. கொட்டடி ஆட்டிறைச்சிக்கடைகள்** | | | | |
| கடை இல. 01 | 1 வருடம் | 2500.00 | 5700.00 | 123.75 |
| ,, .02 | 1 வருடம் | 2500 00 | 7500 00 | 112 50 |
| ,, .03 | 1 வருடம் | 2500 00 | 6200 00 | 112 50 |
| ,, .05 | 1 வருடம் | 2500.00 | 16000 00 | |
| ,, .06 | 1 வருடம் | 2500.00 | 6000 00 | 112 50 |
| ,, .07 | 1 வருடம் | 2500 00 | 5600 00 | 112 50 |
| ,, .08 | 1 வருடம் | 2500 00 | 5700.00 | 112 50 |
| ,, .11 | 1 வருடம் | 2500 00 | 5300 00 | 112.50 |
| **2. குருநகர் மாட்டிறைச்சிக்கடை** | | | | |
| கடை இல. 01 | 1 வருடம் | 2500 00 | 50100 00 | 195 00 |
| ,, .02 | 1 வருடம் | 2500 00 | 22000 00 | 195 00 |
| ,, .03 | 1 வருடம் | 2500 00 | 60000 00 | 195 00 |
| ,, .04 | 1 வருடம் | 2500 00 | 25300 00 | 195 00 |
| ,, .05 | 1 வருடம் | 2500 00 | 51350.00 | 195 00 |
| ,, .06 | 1 வருடம் | 2500 00 | 50300.00 | 195.00 |
| **குருநகர் ஆட்டிறைச்சிக் கடை** | | | | |
| கடை இல. 07 | 1 வருடம் | 2500-00 | 14315-00 | 195-00 |
| **03. நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை** | | | | |
| கடை இல. 01 | 1 வருடம் | 2500-00 | 7175-00 | 200-00 |
| '' 02 | 1 வருடம் | 2500-00 | 6550-00 | 200-00 |
| '' 03 | 1 வருடம் | 25 0-00 | 6000-00 | 200-00 |
| '' 04 | 1 வருடம் | 2500 00 | 5550-00 | 200-00 |
| '' 05 | 1 வருடம் | 2500-00 | 5250-00 | 200-00 |
| '' 06 | 1 வருடம் | 2500-00 | 7100-00 | 200-00 |
| '' 07 | 1 வருடம் | 2500-00 | 5150-00 | 200-00 |
| **நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை** | | | | |
| கடை இல- 08 | 1 வருடம் | 2500-00 | 4175-00 | 200-00 |
| 09 | 1 வருடம் | 2500-00 | 5300-00 | 200-00 |
| **04. பாஷையூர் மாட்டிறைச்சிக்கடை** | | | | |
| கடை இல. 01 | 1 வருடம் | 2500-00 | 51000-00 | 135-00 |
| '' 03 | 1 வருடம் | 2500-00 | 50000-00 | 135-00 |
| 05 நரிக்குண்டு மா இ. கடை | 1 வருடம் | 2500-00 | 63000-00 | 135-00 |
| 06. அரியாலை மா. இ. கடை | 1 வருடம் | 2500 00 | 16500-00 | 135-00 |
| 07. அரியாலை ஆ. இ. கடை | 1 வருடம் | 2500-00 | 10650-00 | 135 00 |
| **08. செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை** | | | | |
| கடை இ: 01 | 1 வருடம் | 2500-00 | 20000.00 | 112 50 |
| '' 02 | 1 வருடம் | 2500-00 | 8000-00 | 112-50 |
| 09. புங்கங்குளம் ஆ இ. கடை | 1 வருடம் | 2500-00 | 10200-00 | 200-00 |
| '' மா. இ- கடை | 1 வருடம் | 2500-00 | 26000-00 | 200-00 |

05. இறைச்சிக்கடை, கோழிக்கடைகளுக்கான கேள்வியானது மாதாந்த வாடகைக்கு பிறம்பாகக் கடையைக் குத்தகையாகப் பெறுவதற்கு கேட்கப்படும் கூடுதல் உரிமைப் பண அடிப்படையிலேயே அமையும் குறித்த உரிமைப்பணமானது எக்காலத்திலும் மீளளிக்கப்படமாட்டாததும் வாடகைக்கு எதிராக கணக்குக்கு வைக்கப்பட மாட்டாததும் சபையின் வருமானத்திற்குரியதுமாகும்.
06. சந்தைகளுக்கான சித்திபெற்ற கேள்விக்காரர் அறிவித்தல் கிடைக்க ஏழு நாட்களுக்கு கேள்வித்தொகையின் 1/3 பங்கை முற்பணமாகச் செலுத்த வேண்டும் குத்தகை தொகையின் மிகுதிப்பணத்தை மூன்றுசம பங்குகளாகப் பிரித்துவரும் தொகையை முறையே மார்ச் 31, ஜூன் 30, செப்ரம்பர் 30, ஆகிய தினங்களுக்கு முன்பாகச் செலுத்தி முடிக்கவேண்டும் குத்தகை சம்பந்தமான எதுவித கொடுப்பனவுகளுக்கும் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
07. இறைச்சிக்கடை கோழிக்கடைகளுக்கான சித்திபெற்ற கேள்விக்காரர் அவரது கேள்வி ஏற்றுக்கொண்டமை பற்றி அறிவிக்கப்பட்ட இருவாரகாலத்தினுள் அவரால் குறிப்பிட்ட உரிமைப்பணம் முழுவதையும் மூன்றுமாத வாடகை முற்பணத்தையும் 1994ம்ஆண்டுக்கான உரிமைக்கட்டணத்தையும் செலுத்தி உடன்படிக்கை செய்தல் வேண்டும்.
08. சந்தைக்கட்டண அறவீடுகள் யாழ்ப்பாண மாநகரசபையால் விதிக்கப்பட்ட அல்லது விதிக்கப்படும் வீதத்திற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்
09, மேற்கூறப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றாத கேள்விப்படிவங்களை முறையாகப் பூரணப்படுத்தாத கேள்விக்காரரின் கேள்விகள் நிராகரிக்கப்படும்
10. ஏற்கனவே இச்சபையில் மேற்குறிப்பிடப்பட்ட குத்தகைகளை ஏற்று குத்தகைப்பணம் முழுவதையும் செலுத்தத்தவறியவர்களுக்கு கேள்விப்படிவங்கள் வழங்கப்படமாட்டாது
11. இவ் அறிவித்தலில் குறிப்பிட்ட எந்தவொரு குத்தகைக்காகவும் சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு கேள்வியையும் எதுவித காரணமும் காட்டாது கேள்விகள் திறப்பதை நிறுத்திவைக்கவோ, ஒத்திவைக்கவோ அல்லது திறக்கப்பட்ட எந்தவொரு கேள்வியையும் அல்லது கேள்விகள் அனைத்தையும் அல்லது அதன் ஒரு பகுதியை எதுவித காரணமும் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ மாநகரசபை ஆணையாளருக்கு பூரண உரிமையுண்டு.
12; 25 11 94 -ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர் அல்லது அவரது பிரதிநிதி பிரசன்னமாயிருப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.
13; இக்கேள்விகள் சம்பந்தமான மேலதிக விபரங்களை மாநகரசபையின் நாவாந்துறை இறைவரிப்பகுதி அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
1994-11-07
(சி-10668)

## நினைவு கூருகின்றோம்...

**09. 11. 94**

1987ஆம் ஆண்டு இத்தினத்தில் மானிப்பாய்ப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய

**லெப் நகுலன்** (செல்லத்துரை சூரியப்பிரதாபன் - புலோப்பளை மேற்கு - பளை)

யாழ்-கட்டபிராய்ப் பகுதியில் இந்தியப்படையினருடான சமரில் வீரச்சாவெய்திய,

**பஞ்சன்** (செல்வநாயகம் பஞ்சரத்தினம்-''சந்திரிகை'' உரும்பராய் தெற்கு-யாழ்)

1989 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய,

★ **மிஸ்வின்** (- - அக்கரைப்பற்று - அம்பாறை)
★ **ராசா** (- - மலையகம் - கண்டி)

1990 ஆம் ஆண்டு யாழ்- நல்லூர்ப் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானக் குண்டு வீச்சில் வீரச்சாவெய்திய,

**பழனி** (கனகரட்ணம் கேதீஸ்வரன் - 16 டி, மல்லாவி துணுக்காய்)

சாவகச்சேரிப் பகுதியில் எமது முகாம்மீது சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**ஜஸ்ரின்** (தியாகராசா சிறிஸ்கந்தராசா -785: துணுக்காய் மல்லாவி)
**2ம்.லெப்.குட்மன்** (தாமோதரம்பிள்ளை பிரபாகரன் - இயற்றாலை, வரணி - கொடிகாமம்)
**லோலோ** (உடையார் மகாராசா-முதலியார் வீதி, அளவெட்டி வடக்கு . யாழ்)
**அலெக்ஸ்** (கிட்டினர் சுகந்தன் - மாசேரி, வரணி - கொடிகாமம்)
**ரவாஸ்/நவாஸ்** (இராசரத்தினம் சுதானந்தன் - கைதடி மேற்கு - யாழ்)
**வல்லவன்** (சுப்பிரமணியம் அனுஷாந்தன் - இணுவில் தெற்கு-யாழ்)

1992 ஆம் ஆண்டு கிளாலிக்கடற்பரப்பில் சிறிலங்காப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் மதியழகன்/மகளன்** (நடராசா றஜீஸ்குமார் - புதுக்கலட்டி, அல்வாய் தெற்கு)

ஆனையிறவுப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப் பிரிந்த

**2-ம் லெப். அறிவழகன்/தயானந்தன்** (இராமையா மனோகரன்-கந்தசாமி கோவிலடி-கிளிநொச்சி)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினராலும் இந்தியப் படையினராலும் தேசவிரோதிகளாலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி 10672)

## 7 ஆம் ஆண்டுநினைவஞ்சலி



**வீரவேங்கை பஞ்சன**
**(செல்வநாயகம் பஞ்சரத்தினம்)**


மலர்வு 10-5-1968
உதிர்வு 9-11-1987

மண்ணுக்காக உயிர்நீத்த
மாவீரனே
கண்ணுக்குள் நீ நிற்கின்றாய்
கனவிலும் நாம் மறவோம்

'சிவகுல வீதி,',
உரும்பிராய் தெற்கு
09-11-1994

பெற்றோரும்
உடன் பிறப்புகளும்
(10013)

# வீர வணக்கம்



## கடற்கரும்புலி மேஜர்-வித்தி

வெற்றிலைக் கேணியில் ''அற்புதம்'' நடந்தது
''வித்தி'' யென்றோர் புலி வெற்றியைக் குவித்தது
கடற்கரும்புலி யொரு கப்பலைத் தகர்த்தது
கண்ணெதிரே பெரும் கனலென மூண்டது
இனிவரும் நாளிலும் இனும் வெடி அதிர்ந்திடும்
இவன் நினைவோடொரு கொடி யெழுந்தாடிடும்

ஈழநாதம்

### சிந்தனைக்கு

மனித இனத்தின் இயல்பான சஞ்சாரங்கள், ஓர் இன்பத்திலிருந்து, இன்னோர் இன்பத்திற்கு அல்ல; ஓர் எதிர்பார்ப்பிலிருந்து, மற்றோர் எதிர்பார்ப்பிற்குத்தான்

- ஜேம்ஸ் ஜான்சன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 09- 11- 1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 05

# மூன்றாவது ஜனாதிபதித் தேர்தல்

சிறிலங்காவின் நான்காவது ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான மூன்றாவது ஜனாதிபதித் தேர்தல் இன்று நடைபெறவுள்ளது. இத்தேர்தலானது கடந்தகால ஜனாதிபதித் தேர்தல்களில் இருந்து முற்றிலும் மாறுபட்ட ஓர் அரசியற் சூழ்நிலையில், பெரிய மாற்றங்கள் நிகழலாம் என்பதின் அடிப்படையில் எதிர்பார்க்கப்படும் முக்கியமான தொரு தேர்தலாக அமையும் எனக்கருதப்படுகின்றது.

இத்தேர்தல் குறித்த எதிர்வு கூறல்களின் அடிப்படையில் பொது ஜன ஐக்கிய முன்னணி வேட்பாளர், பிரதமர் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க வெற்றி பெறுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறே சந்திரிகா குமாரதுங்கா வெற்றி பெறுவாரேயானால் சிறிலங்கா அரசியலில் பாரிய மாற்றங்கள் பலவற்றை எதிர்பார்க்கலாம்.

இதில் முதலாவதாக திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஐக்கிய தேசியக் கட்சிக்கென உருவாக்கிய ஜனாதிபதி ஆட்சி முறையானது 17 வருடங்களின் பின்னர் முதற்தடவையாக வேறோர் கட்சியின் கைக்கு மாறுகின்றமை முக்கியமானதாகும். இதன் மூலம் சிறிலங்கா அரசியலில் முதல் மாற்றத்தைக் காண்பதெனலாம். மறுவளமாகக் கூறுவதானால் முதற்தடவையாக சுதந்திரக்கட்சியானது - பொ.ஐ.மு. -முதற்தடவையாக ஜனாதிபதி ஆட்சி முறையில் அதிகாரத்தைக் கைப்பற்றுகின்றதெனலாம்.

இதேசமயம் பொ.ஐ.மு கூறிக் கொள்வதன் அடிப்படையில் நடந்து கொள்ளுமானால் அடுத்த ஆண்டின் நடுப்பகுதியில் இவ் அரசியல் அமைப்பு மாற்றத்திற்கு உள்ளாகலாம். கடந்த காலத்தைப் போன்று பாராளுமன்ற ஆட்சிமுறைக்கு சிறிலங்கா அரசு செல்லக் கூடும். பெரும்பாலும் இது நடைபெறலாம் என்றே எதிர்பார்க்கப்படுகின்றதாயினும் அதனை அறுதியிட்டுக் கூறிவிடவும் முடியாது.

ஏனெனில் அதிகாரத்திற்கு வந்ததன் பின்னர் யார் யார் எவ்வாறு செயற்படுவார்கள் என்பதை உடன் கூறிவிட முடியாது. எடுத்துக்காட்டாக ஐ.தே. கட்சி அரசாங்கம் வெகுஜன தொடர்பு சாதனங்களை தவறாகப் பயன்படுத்துகிறது துஷ்பிரயோகம் செய்கின்றது என அன்று சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுப் போன்றே இன்று பிரதமர் சந்திரிகா தலைமையிலான அரசாங்கம் மீதும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இக்குற்றச் சாட்டுகளுக்கு சில ஆதாரங்களும் காண்பிக்கப்படுகின்றன.

அத்தோடு அரசியல் யாப்பை மாற்றி விடுதல் என்பது பொ. ஐ. முன்னணி எண்ணுவது போன்றோ, கூறிக் கொள்வது போன்றோ அத்துணை சுலபமான காரியமாக இருக்கப் போவதில்லை எனச் சிலர் கருதுகின்றனர்; இம்மாற்றத்திற்குத் தேவையான பலம் தற்பொழுது பொ.ஐ.மு. அரசாங்கத்திடம் இல்லை எனவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அவ்வாறு தான் ஏதோ ஒருவழியில் ஜனாதிபதி ஆட்சி முறை மாற்றப்பட்டுவிட்டாலும் கூட கடந்த 17 வருட காலத்தில் அவ் அரசியல் அமைப்பு உருவாக்கிய பிரச்சினைகள், தோற்றுவித்த நெருக்கடிகள் என்பனவற்றை பொ.ஐ.முன்னணி அரசாங்கத்தால் தீர்த்து வைக்க முடியுமா என்பது கேள்விக்குறியே. ஏனெனில் அத்துணை தூரம் சிக்கலானதும் சர்ச்சைக்குரிய பிரச்சினைகளையும் ஐ.தே.க அரசாங்கம் உருவாக்கியுள்ளது.

இந்தவகையில் இனப்பிரச்சினை, புதைகுழிகள் விவகாரம், ஊழல் மோசடி ஆயுதங்களைப்பரவவிட்டமை, பாதாள உலக சாம்ராச்சியங்கள் எனப் பல பிரச்சினைகளை ஐ.தே. அரசு சந்திரிகா குமாரதுங்கா அரசாங்கத்திடம் விட்டுச் சென்றுள்ளது. இவை இலகுவாகவும் சுருக்கமாகத் தீர்த்து வைக்க கூடியவையும் அல்ல.

இவற்றில் இனப்பிரச்சினை மிகவும் முக்கியமானது என்பதோடு சிக்கல் நிறைந்தது கூட. ஏனெனில் ஐ.தே.க. அரசாங்கம் இனப்பிரச்சினையை பூதாகரமாக வளர்த்துவிட்டுள்ளதோடு அதனைத் தீர்க்க முடியாத அளவிற்கு முட்டுக்கட்டைகளையும் உருவாக்கி விட்டே உள்ளதெனலாம். இந்தவகையில் இனப்பிரச்சினை தொடர்பான விடயத்தில் ஐ.தே.க உருவாக்கிய பெரும் முட்டுக்கட்டை வீங்கிப் பெருத்துள்ள இராணுவமே ஆகும். இதனை எவ்வாறு எதிர்கொள்வது, வெற்றி கொள்வது என்பதைப் பொறுத்தே சந்திரிகா அரசின் வெற்றி தங்கியுள்ளதெனலாம்.

ஆனால் இவை யாவும் எதிர்வு கூறலின் அடிப்படையில சந்திரிகா குமாரதுங்கா வெற்றி கொண்டால் மட்டுமே. இல்லாது போனால் இரண்டாம் கட்ட ஈழப் போரின் தொடர்ச்சியை ஐ.தே.கவின் புதிய தலைமை விரைவிலேயே ஆரம்பித்து விடும்.

# தரையிறக்கும் கப்பல் குறித்த சில விபரங்கள்

வெற்றிலைக்கேணியில் கடற்கரும்புலித் தாக்குதலுக்குள்ளான சிறிலங்கா கடற்படையின் தரையிறக்கும் போர்க்கப்பல் பற்றிய விபரங்கள்:

- ★ கப்பலின் நீளம் - 108 அடி (33 மீற்றர்)
- ★ அகலம் - 26 அடி (8 மீற்றர்)
- ★ வேகம் - 8 கடல்மைல்/மணி
- ★ வீச்சு - 1800 கடல்மைல்
- ★ நிறை - 268 தொன்
- ★ கப்பலில் ஒரு சமயத்தில் பணியாற்றுபவர்கள்-12 பேர்
- ★ ஒரே தடவையில் 600 துருப்புக்களை ஏற்றிச் செல்லும் அல்லது நான்கு கனரக வாகனங்களை கொண்டு செல்லக்கூடியது.
- ★ இரண்டு கட்டபிளர் டீசல் என்ஜின்களை கொண்டது இவை ஒவ்வொன்றும் 1524 குதிரைவலு கொண்டவை.
- ★ இரண்டு புரொப்பலர்களைக் கொண்டது.
- ★ கொண்டிருக்கும் ஆயுதங்கள்
  20 மி.மீ ஒலிகன் பீரங்கி - 2
  12.7 மிமீ சீனத்தயாரிப்பு விமான எதிர்ப்பு துப்பாக்கிகள் - 2
- ★ சிங்கப்பூர் வெஸ்பா நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது
- ★ கப்பலின் பெறுமதி -12 கோடிரூபா
- ★ ஆழ்கடலில் 1.5 மீற்றர் அமிழ்ந்து செல்லும் இக்கப்பல் தரையிறக்கும்போது இரண்டு அடி தண்ணீரிலும் மிதக்கக்கூடியது
- ★ 1983-ம் ஆண்டு சிங்கப்பூர் நிறுவனத்தால் சிறிலங்கா கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டது
- ★ இக்கப்பல் முல்லைத்தீவு, பூநகரி வெற்றிலைக்கேணி என பல இடங்களில் சிறிலங்கா படையினரையும் வாகனங்களையும் தரையிறக்க பயன்பட்டது
- ★ 9-10-1992இல் கற்பிட்டிக் கடலில் மூழ்கிய சுந்துல தரையிறக்கும் கப்பலின் இனத்தைச் சேர்ந்தது

# கடற்புலிகள் வீரத்தை பாடும் இரு ஒலிநாடா வெளியீடு

தமிழீழக் கடற்பரப்பெங்கும் புதிய வரலாறு எழுதி, உலகத்தின் புருவங்களை உயர வைத்து தமிழனை தலைநிமிரச் செய்யும் கடற்புலிகளின் வீரத்தையும் ஈகத்தையும் வரிகளாக எழுதி இசையாக வடித்தெடுத்த இரண்டு பாடல் ஒலிப்பதிவு நாடாக்களான ★ கடற்கரும்புலிகள் ★ கடலின்மடியில் ஆகியன விரைவில் வெளிவரவுள்ளன. கடற்புலிகளின் வெளியீடாக கலை பண்பாட்டுக் கழகத்தின் உருவாக்கத்தில் உங்கள் செவிகளுக்குள் தேனள்ளி வார்த்து சிந்தையில் தீமூட்டும் பாடல்களின் தொகுப்புக்கள் இரண்டும் விரைவில் உங்களின் கைகளில் கிட்டும் என விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் அறியத் தருகின்றனர்.

# நிதர்சனம் நிறுவனத்தின் இருஒளிநாடா வெளிவந்தது

நிதர்சனம் நிறுவனத்தின் செப்டெம்பர் மாத ஒளிவீச்சு வீடியோ சஞ்சிகையும் மாவீரர் நாள்- 1993 ஒளிநாடாவும் இன்று பிற்பகல் 5.00மணிக்கு யாழ் ஸ்ரீகர் திரையரங்கில் காண்பிக்கப்படவுள்ளது இக்காட்சிக்கான அனுமதி இலவசம்.

சாகரவர்தனா மீதான தாக்குதல், யுத்தக் கைதிகள் விடுவிப்பு, லெப். கேணல் திலீபன் நினைவுகள், கலைநிகழ்ச்சிகள் மற்றும் பல அம்சங்கள் ஒளிவீச்சில் இடம்பெற்றுள்ளன.

மண்ணின் விடுதலைக்காக தம்மையே ஆகுதி ஆக்கிவிட்ட மாவீரர்கள் குறித்த நிகழ்வுகள் மாவீரர் நாள்- 1993 ஒளிநாடாவில் இடம்பெற்றுள்ளன

# இன்று "உதயகீதங்கள்" வெளியீட்டு விழா

தமிழிசைக் கவிஞர் சங்கீத பூஷணம் அ.கி. ஏரம்பமூர்த்தியின் "உதயகீதங்கள்" கவிதைத் தொகுதி வெளியீடு இன்று பிற்பகல் 3.00 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது

இவ் வைபவத்தில் சிவசக்தி சங்கீத நர்தனாலயத்தினரால் உதயகீதங்கள் பாடல்கள் இசை நிகழ்ச்சியாக இசைக்கப்படும்

# குடியிருப்புகள் நோக்கி கலிபர் தாக்குதல்

மாதகல் பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று முற்பகல் 11 மணியளவில் பண்டத்தரிப்பு, சில்லாலை பகுதிகளை நோக்கி கலிபர் தாக்குதலை மேற்கொண்டனர். அத்தோடு நண்பகல் வேளை இடையிடையே எறிகணைத் தாக்குதலையும் மேற்கொண்டனர்.

மேலும் காரைநகர் இராணுவ கடற்படை கூட்டு முகாமிலிருந்து நேற்று முன்தினம் இரவு 9.45 மணியளவில் மூளாய், பொன்னாலைப் பகுதிகளை நோக்கி கலிபர் வேட்டுக்கள் சரமாரியாகத் தீர்க்கப்பட்டன. இதேவேளை கடலில் ரோந்து சுற்றிவந்த சிறிலங்கா கடற்படையினர் வெளிச்சக் குண்டுகளை வானை நோக்கி ஏவினர். இவ் வெளிச்சக் குண்டுகள் சுழிபுரம் பறாளாய் பகுதியின் வான் பரப்பில் பிரகாசத்துடன் எரிந்ததை அவதானிக்கமுடிந்தது (41)

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994.11.09**
**புதன் இரவு**

- 8.01-குயிலோசை - நகிருஷ்ணா எழுதியநம் கிராமம் நாளை மீளும்" கிராமிய நிகழ்வு
- 8.20-ஏர்முனை "ஞானம் பிறந்தது" தனிப்பு
- 8.30-செய்திகள்
- 8.40-நாடகம் - அளவைக் குமரன் எழுதிய "காலப்புரிதல்"
- 9.00-மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

**1994.11.10**
**வியாழன் காலை**

- 7.02-மாவீரவணக்கம்
- 7.15-விடுதலை கீதங்கள்
- 7.30-செய்திகள்
- 7.35-பத்திரிகைச் செய்திகள்
- 7.40-விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி
- 8.00-மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

## தொடர்பு கொள்க

இலங்கைக் கல்வி நிருவாக சேவைப் பதவி உயர்வுகளில் தமக்கு நீதி வழங்கப்படவில்லை எனக் கருதுவோர் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு கல்வி நிர்வாக சேவை அலுவலர் சங்கச் செயலாளர் நா.க. சண்முகநாதபிள்ளை கேட்டுள்ளார்.

# ஆயிரம் 'வித்தி'கள் அணிவகுத்துள்ளனர் அடுத்தடுத்து இடிவிழும்

அந்த இடத்துக்கு அடையாளம் வையுங்கள்
இனி எந்த முகத்தோடு இங்கு வருவார்கள்.
தரையிறக்கும் கப்பல்
இங்கேதான் தலை முழுகியது.
எதிரிக்கு இருந்த இறுதித் துரும்பும்
இல்லையென்றாகிவிட்டது.
நேற்றுத்தான்
பெரிய கப்பல் இரண்டுக்குப் பொருத்தம் பார்த்து
கைபிடித்து ஒப்பந்தம் செய்தார்கள்.
இன்று
இருந்த 'கோமணமும்' இல்லாமற் போனது.
ஆனையிறவுச் சமருக்கு
இந்தத் துருப்பிடித்த கப்பலிற்தான்
துருப்புக்கள் கொண்டு வந்தார்கள்.
பழைய இரும்புகள் வாங்குவோர்களே!
எங்கும் போக வேண்டாம் இங்கே வாருங்கள்
கடற்புலிகள் புதைத்த கப்பல்களால்...
இந்துசமுத்திரம் இரும்புக்கடையாகிவிட்டது.
நேற்றிரவும்
வெற்றிலைக்கேணியில் வெடியதிர்ந்தது
சுற்றிவரநின்ற "டோறாக்கள்" சிதறியோட
'தம்பி வித்தி' தணலானான்.
வலையிழுப்போருடன் வல்லமை காட்டிய
கொலைவெறியர்கள் குடல்தெறிக்க ஓடினர்
தரையிறக்கும் கப்பல்...
காலுடைந்து கரையில் கிடக்கிறது.
நாளைக்கு இந்த 'கடற்பூதத்தை' இழுத்து வந்து
'கிட்டுமாமா' பூங்காவில் பார்வைக்கும் வைக்கலாம்
அந்த இரும்பில் "இராட்டனம்" செய்து
சின்னப் பூக்களைச் சிரித்திட வைக்கலாம்
என்ன செய்யலாம்?
பேச்சுவார்த்தைக்கு வரும்போது
"லயனலை" கேட்போம்.
பூநகரியில் புலிகள் புகுந்த போது
இருந்த எதிரி நிலைகுலைந்து போனான்.
இந்தக் கப்பல்தான் ஓடிவந்து உதவி செய்தது.
இன்று
அந்தக் கப்பல் ஐயோ என்று கத்தியபோது
காப்பாற்ற யாரும் கரைக்கு வரவில்லை!
நாகதேவன்துறையில் அள்ளியெடுத்த
வேகப் படகுகளில் ஏறித்தான்
வேங்கைகள் கலைத்தன
எட்ட இருந்து எதிரி என்ன நினைத்திருப்பான்?
எங்கள் தலைவனை எண்ணிப் பயந்திருப்பான்
"கரிகாலனை" ஒரு தடவை காண நினைத்திருப்பான்
எரியும் கப்பலை இடித்தவன் யாரென
எத்தனை கற்பனையில் இரவைக் கழித்திருப்பான்
யுத்தநிறுத்தத்துக்கு எத்தனை 'சமிக்கைகள்'
"அக்காவுக்கு" எழுதிவிட்டு...
நம்பிக்கையுடன் காத்திருந்தோம்.
எல்லாமே செவிடன் காதில் ஊதிய சங்கானது;
இப்போது எப்படி?
'மேஜர் வித்தி' ஒருவன் மட்டுமல்ல...
ஆயிரம் வித்திகள் அணிவகுத்துள்ளனர்
அடுத்தடுத்து இடிவிழும்
கப்பல், கப்பலாக வாங்குங்கள்
'வெள்ளோட்டம்' மட்டும்தான் உயிர்வாழும்
மறுநாள் அடிக்கடலின் ஆழத்தில் கிடக்கும்
கடற்கரும்புலி வெடிக்கும் ஒவ்வொரு தடவையும்
வேறு கப்பல்கள் வாங்க விமானம் ஏறுங்கள்.
இன்னும் எத்தனை கப்பல்கள் இருக்கின்றன.
விபரம் தாருங்கள்
எண்ணிக்கையளவு கரும்புலிகளை
கரையிலே விட்டுவிட்டு
மற்றவர்களை மற்ற வேலைகளுக்கு அனுப்பலாம்
கப்பலைத் தகர்க்க சுனபேர் தேவையில்லை.
மேஜர் வித்தி ஒருவனென்றா நினைத்தீர்கள்
ஆயிரம் வித்திகள் அணிவகுத்துள்ளனர்;
இனியும்
அடுத்தடுத்து இடிவிழும்.

- புதுவை இரத்தினதுரை

காமினி கொலை தொடர்பான விசாரணைக்கு

# புலனாய்வு அதிகாரிகளை அனுப்புதல் குறித்து இந்தியஅரசு தீவிரபரிசீலனை

(கொழும்பு)

காமினி திசாநாயக்காவின் கொலை குறித்து புலன்விசாரணையில் உதவ இரு இந்திய நிபுணர்களின் சேவையை வழங்குமாறு சிறிலங்கா அரசு விடுத்த கோரிக்கையை இந்திய அரசு தீவிரமாக பரிசீலிப்பதாக சிறிலங்கா வெளியுறவு அமைச்சு அறிவித்தது-

இவ்விடயத்தில் எந்தளவில் உதவ முடியும் என்பது குறித்து இந்திய அரசு பரிசீலித்து வருவதாக சிறிலங்கா வெளியுறவு அமைச்சு இந்தியா அறிவித்துள்ளது. இது தொடர்பான இந்திய அரசின் கடிதம் இந்திய தூதரகத்தால் வெளிநாட்டமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

காமினி கொலை தொடர்பாக புலனாய்வு மேற்கொள்ள திருமதி சிறிமா திசாநாயக்கா இரு இந்திய அதிகாரிகளை வரவழைக்க வேண்டும் என அரசிடம் கோரியிருந்ததும் இதை அரசு ஏற்று இது தொடர்பாக இந்திய அரசிடம் கோரிக்கை விடுத்திருந்ததும் தெரிந்ததே.

# புலிகளுக்கு பொருள்கள் எதையும் நாம் அனுப்பி வைக்கவில்லை

(கொழும்பு)


"நாம் யாழ்ப்பாண மக்களுக்கு மட்டுமே பொருள்களை அனுப்பினோம். விடுதலைப் புலிகளுக்கு அல்ல" என சிறிலங்கா பிரதமர் சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; விடுதலைப் புலிகளுக்கு இது வரை நாம் எந்தப் பொருள்களையும் வழங்கவில்லை பேச்சுக்கள் தொடர்ந்தாலும் அவர்களுக்கு எந்த ஒரு பொருளும் வழங்கப்படமாட்டாது ஆனால் யாழ்ப்பாண மக்களுக்கு பொருள்கள் தொடர்ந்து கிடைக்க வழி செய்யப்படும் என்றார்

சமாதானம் சாத்திய

**பிரதமர் சந்திரிகா**

மடைந்து விடுதலைப் புலிகளுக்கு ஏதாவது கொடுக்க வேண்டிய நிலை வந்தாலும் வெடிமருந்துகள் ரவைகள், ஆயுதங்கள் வழங்கப்படமாட்டாது என மேலும் அவர் கூறினார்



நேற்று வெற்றிலைக்கேணி கரையில் கடற்கரும்புலிகளின் தாக்குதலுக்கு இலக்கான சிறிலங்கா கடற்படையினரின் தரையிறக்கும் கப்பலை மேலுள்ள படத்தில் காணலாம்.

# அரசு யுத்தநிறுத்தம் அறிவிக்கவில்லை; புலிகள் தமது நோக்கில் செல்கின்றனர்

### கொழும்பு அரசியல் விமர்சகர்

(கொழும்பு)

தேர்தலுக்குமுன்பாக கடற்படையின்கப்பலை விடுதலைப் புலிகள் தாக்கினர் என்று கூறப்படுவது தவறான விடயமாகும். விடுதலைப் புலிகளை பொறுத்தவரையில் அவர்களது நோக்கம் தமிழீழ விடுதலை அந் நோக்கத்தை அடையும் வரையில் அவர்கள் இராணுவரீதியான கண்ணோட்டத்துடனேயே செயற்படுவர் அரசு ஓர் யுத்தநிறுத்தத்தை அறிவிக்கவில்லை- இவ்வாறு பிரபல அரசியல் மற்றும் இராணுவத்துறை விமர்சகரும் பத்திரிகையாளருமான டி. சிவராம் - தாரகி - பி பி ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

நேற்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன கலையகத்திலிருந்தவாறே டி சிவராம் மற்றும் வீரகேசரி நாளிதழ் ஆசிரியர் சிவநேசச் செல்வன், தினகரன் செய்தி ஆசிரியர் ஆனந்த பாலகிட்ணர் ஆகியோர் பி.பி ஸிக்கு பேட்டியளித்தனர்-

இதன் போது தேர்தலுக்கு முன்பாக கடற்படை கப்பல் விடுதலைப் புலிகளால் மூழ்கடிக்கப்பட்டது ஏன் என பி.பி.ஸியில் கேட்கப்பட்டபோதே சிவராம் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் அரசபடைகளுக்குவிநியோகம்நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது அவர்கள் கப்பலைத் தாக்கியுள்ளனர் என்றார்

இப்படியான நடவடிக்கைகள் சமாதான முயற்சிகளை பாதிக்குமா என்று கேட்கப்பட்டபோது பதிலளித்த தினகரன் செய்தி ஆசிரியர் ஆனந்தபாலகிட்ணர் நிச்சயம் பாதிக்காது என்றார். பிரச்சினையை தீர்ப்பதில் பிரதமர் ஆர்வமாக உள்ளார். தற்போதைய பிரச்சினைக்கு முன்னைய ஆட்சியாளர்களின் அடக்கு முறைகளே காரணம் அதன் தொடர்ச்சியாகவே இன்றும் வன்முறைகள் தொடர்கின்றன- போர் நிறுத்தம் ஒன்றை பேச்சுகள் ஆரம்பிக்க முன்னர் விடுதலைப் புலிகள் கோரியிருந்தனர்- எனவே பேச்சுகளுக்கு முன் போர் நிறுத்தம் செய்வது நல்லது-

சமாதான முயற்சிகளை புலிகள் ஏற்பர் என்று கருதுகிறீர்களா எனக் கேட்டபோது பத்திரிகையாளர் டி-சிவராம் பதிலளிக்கையில் புலிகள் தாம் ஏற்றுக் கொள்ளக்கூடிய திட்டத்தை முன் வைத்தால் அதை பரிசீலிப்பதாக ஏற்கனவே கூறியிருக்கின்றனர்- அப்படியான ஒரு தீர்வையும் அரசு இதுவரை முன்வைக்காத நிலையில்விடுதலைப் புலிகளது கண்ணோட்டத்தில் இத் திட்டங்களை இப்போது பரிசீலிக்க வேண்டிய அவசிய நிலையில்இல்லை என்றார்-

# யுத்தநிறுத்தம் ஏற்படாதவரை புலிகள் தாக்குவதில் தவறில்லை

### நியூட்டன் செனவிரட்ண

(கொழும்பு)

யுத்தநிறுத்தம் ஒன்று இன்றுவரை ஏற்படாத நிலையில் விடுதலைப் புலிகள் தமது நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர் இதுதான் நேற்று வெற்றிலைக் கேணியில் நடந்தது என 'ராவய' பத்திரிகையின் செய்தி ஆசிரியர் நியூட்டன் செனவிரட்ண தெரிவித்துள்ளார்

நேற்றிரவு லண்டன் பி.பி ஸியின் சிங்கள சேவைக்கு செய்மதி ஊடாக அவர் வழங்கிய பேட்டியில் இவ்வாறு குறிப்பிட்டார்

மேலும் அவர் கூறுகையில், யுத்தநிறுத்தம் ஏற்படாத நிலையில் புலிகள் செய்ததைப் பிழை என்று கூற முடியாது சில தாக்குதல்களை இராணுவம் கூட செய்துள்ளது ஆனால் இவ்வாறான தாக்குதல்கள் சமாதானப் பேச்சுக்களை எந்த விதத்திலும் பாதிக்கப் போவதில்லை என்பது மட்டும் உறுதி என்றார்

## போல்டிக்கடலில் தத்தளித்த இலங்கை அகதிகள் மீட்பு

### சுவீடனிற்குள் செல்ல முயன்றனராம்

(ஸ்ரக்ஹோம்)

போல்டிக் கடலில் சிறிய படகுகளில் தத்தளித்துக் கொண்டிருந்த இலங்கை, ஈராக் அகதிகள் மீட்கப்பட்டுள்ளனர். இவர்கள் படகுகள் மூலம் சுவீடனில் சட்டவிரோதமாக நுழைய முற்பட்டதாகவும் இவர்களை சுவீடனின் கரையோர பாதுகாப்புப் படகுகள் மற்றும் உலங்குவானூர்திகள் கரையேற்றியதாக தெரிவிக்கப்படுகிறது;

இலங்கை, ஈராக் ஆகிய நாடுகளின் அகதிகள் மூன்று உயிர்காப்பு படகுகளில் பெண்களும் பிள்ளைகளும் இருப்பதை ரஷ்ய கப்பல் ஒன்று கண்டது காலநிலை சீராக இருந்ததாகவும் அதிலிருந்த அகதிகள் கம்பளி உடையணிந்து நல்ல தேகாரோக்கியமாக இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ரஷ்ய வர்த்தக கப்பல் ஒன்று இவர்களை சுவீடனுக்கு கொண்டுசென்றது.

இந்த அகதிகள் ரஷ்யாவிலிருந்தும் போல்டிக் நாடுகளிலிருந்தும் சுவீடன் செல்ல முயன்றதாக கூறப்படுகிறது இன்னும் பலர் ரஷ்யாவிலிருந்து சுவீடன் செல்ல காத்திருப்பதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது

### கலந்துரையாடல்

வலிகாமம், தீவகக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் உள்ள மாணவர் அமைப்பு உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் இன்று மாலை 4-00 மணியளவில் யாழ்-கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற இருப்பதனால் இக்கலந்துரையாடலில் வலிகாமம், தீவகக்கோட்ட மாணவர் அமைப்பு உறுப்பினர்கள் அனைவரையும் தவறாறு கலந்துகொள்ளுமாறு யாழ் மாவட்ட விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினர் கேட்டுக்கொள்கின்றனர்-

### மாவீரர் நாள் கலந்துரையாடல்

கரவெட்டி,பருத்தித்துறை, மருதங்கேணி பிரதேச செயலகங்களைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் இன்று மாலை 3.00 மணிக்கு பருத்தித்துறை மெதடிஸ்ட் பெண்கள் உயர் கல்லூரியில் நடைபெறும்; அனைத்து கிராம உத்தியோகத்தர்களும் தவறாது கலந்து கொள்ளும்படி தமிழீழ நிர்வாக சேவையினர் கேட்டுக் கொள்கின்றனர்;

● ● ●

1994-ம் ஆண்டு மாவீரர் நாள் தொடர்பாக ஒலி, ஒளி உரிமையாளர்களிற்கான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10.00 மணிக்கு யாழ். மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் நடைபெறவுள்ளதால் யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒலி, ஒளி உரிமையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்; மாவட்ட அரசியல் துறையினர் கேட்டுள்ளனர்;

### சிறிலங்காவில் தக்கது

மூன்றாவது ஜனாதிபதி தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணிவேட்பாளராக தற்போதைய பிரதமர் திருமதி சந்திரிகா குமாரதுங்கா போட்டியிடுகின்றார் ஐ தே: க- வேட்பாளராக காமினி திசாநாயக்கா போட்டியில் நின்றபோதிலும் குண்டுவெடிப்பில் அவர் கொல்லப்பட்டதை தொடர்ந்து அவரது மனைவி திருமதி சிறிமாதிசாநாயக்கா வேட்பாளராக கட்சியினால் நிறுத்தப்பட்டுள்ளார் இனவாதக் கட்சியான பூமிபுத்திர கட்சியின் வேட்பாளராக அதன் தலைவர் டாக்டர் ஹரிச்சந்திர விஜேதுங்க போட்டியிடுகின்றார்-

இவர்களுடன் சுயேட்சை வேட்பாளர்களாக ஏ- ஜே. ரணசிங்க, ஹட்சன் சமரசிங்க ஆகியோரும் போட்டியிடுகின்றனர்;

தேர்தல் பணிகளை மேற்கொள்வதற்காக ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட அரச ஊழியர்கள் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட வாக்களிப்பு நிலையங்களுக்கு நேற்று மாலையளவில் போய் சேர்ந்தனர் தேர்தல்பணிக்கென 40 ஆயிரம் பொலிசார் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்,

## யாழ். புதிய அரச அதிபர் நாளை பதவியேற்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். அரச அதிபராக கே பொன்னம்பலம் நாளை உத்தியோகபூர்வமாக தமது பதவியைப் பொறுப்பேற்கவுள்ளார்

இதுவரை காலமும் யாழ் அரச அதிபராக இருந்த கா மாணிக்கவாசகர் தமது பதவியிலிருந்து ஓய்வுபெற்றதைத் தொடர்ந்து உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் அமைச்சினால் யாழ் அரச அதிபராக கே. பொன்னம்பலம் நியமனம் பெற்று தமது கடமைகளை நாளை பொறுப்பேற்கவுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக கா. மாணிக்கவாசகர் யாழ் செயலகத்திற்கும் செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார் என அறியவருகின்றது; (பா) (தி)

### மண்டைதீவுக்

அலுக்காசி கிங்கொங் (வயது 35) இம்மனுவல் இராசகுமார் (வயது 18), யோகராசா றொசேர் (வயது 19) ஆகியவர்களே திரும்பி வராதவர்களாவர்.

மேற்படி மீனவர்களின் உறவினர்கள் நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ். வதிவிட அலுவலகத்தில் இது சம்பந்தமாக முறைப்பாடு செய்துள்ளனர். (21)

### காவலுக்கு

முகாமில் இருந்தும் கடற்புலிகளை நோக்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

இருப்பினும் கடற்புலிகள் மேற்கொண்ட உக்கிரமான தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது காவலுக்கு நின்ற டோறாப் படகுகள் தப்பி ஓடியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது;

இதே சமயம், இத்தாக்குதல் குறித்து சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியிட்ட இந்திய வானொலி, வடக்கு கரையோரத்தில் புலிகள் கடற்படையின் தரையிறக்கும் கப்பல் ஒன்றை மூன்று மணிநேர கடும் சமரின்பின் தாக்கியதாகத் தெரிவித்தது.

மேலும், விமானப்படையின் ஹெலிகப்டர்கள் எதிர்த் தாக்குதல்களை நடத்தியதாகவும் அது தெரிவித்தது.

### தேர்தலின்

வட்டாரங்கள் தெரிவித்தன தேர்தல் தினத்தன்றும் அதற்கு மறுதினமும் கொழும்பு நகருக்குள் ஊர்வலமாக செல்வதோ அல்லது குழுக்களாக உட்செல்வதோ தடுக்கப்பட்டுள்ளதாகவும், கலவரங்களை ஏற்படுத்துவோர் எனசந்தேகிக்கப்படுவோர் குறித்த விபரங்களைத் திரட்டுமாறு பொலிஸ் அதிகாரிகளுக்குப் பணிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது,

### வடமராட்சி

கள் தொடர்ந்து காலை 4.00 மணி வரை கண் மூடித்தனமாக தாக்கின.

அதேவேளை வெற்றிலைக்கேணி சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்தும் பலத்த ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. தாளையடிக்கும் வேம்படிக்கும் இடையிலேயே குண்டுத் தாக்குதல்கள் நடைபெற்றன. (யோ)


## தேவை

### கணக்காளர்

அனுபவம் வாய்ந்த கணக்காளர்கள் தகைமைகளுடன் விண்ணப்பிக்கவும்; கிளிநொச்சி மாவட்டத்தில் வியாபார, நிதி விடயங்களில் சேவையாற்ற வேண்டும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 20-11-94

விளம்பர இல. 356
மே/பா ஈழநாதம்
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்

(சி-10659)


வேலணை 5-ம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும்
முன்னாள் விவாக, பிறப்பு, இறப்பு
பதிவாளருமாகிய
திரு. சுந்தரம்பிள்ளை இராசரெத்தினம்
அவர்கள் அமரத்துவமெய்தியமை குறித்த

## கண்ணீர் அஞ்சலி



அன்னை மடியில் 1910-08-14

மண்ணின் மடியில் 1994-11-06

வேலணை பெற்றெடுத்த மைந்தா
பாருக்கே உம்மை அர்ப்பணித்த ஆருயிரா!
கலங்குகின்றோம் நாங்கள் உம் பிரிவால்
காணிக்கையாக்குகின்றோம்
கண்ணீர் அஞ்சலியை,

பணிப்பாளர்களும், பணியாளர்களும்
பல. நோ. கூ. சங்கம்,
வேலணை.

(சி-10670)




## வெலிங்டன் சந்திக்கருகில்!

தனது 9 வருட அனுபவத்தில்!!
கணனித் துறைக்கெனத்
தனித்து இயங்கும் !!!

UNIKCO
COMPUTER CENTRE

புதிய பிரிவுகளை ஆரம்பிக்கின்றது!!!!

| COURSE | FEES | DURATION |
|---|---|---|
| BASIC | 1750/- | 4 months |
| PASCAL | 1750/- | 4 months |
| WORDSTAR Rel. 5 . 5 | 2500/- | 3 months |
| dBASE III PLUS | 2500/- | 3 months |
| LOTUS 1-2-3 | 2500/- | 2 months |

Join With Us To Study The Latest Computer Technology
★ தவணைமுறையில் கட்டணங்கள்
★ தமிழில் விளக்கங்கள்
★ கூடிய நேர செய்முறைப்பயிற்சி
★ வார இறுதி வகுப்புகள் ஆரம்பம்: 12-11-94
★ வார நாள் வகுப்புகள் ஆரம்பம்: 11-11-94

மேலதிக விபரங்கட்கு:
37, CLOCK TOWER ROAD
JAFFNA
(சி-10674)



## வருடாந்த பொதுக்கூட்டம் ஒத்திவைத்தல்

அரியாலை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின், இன்று (9-11-94) நடைபெற இருந்த வருடாந்த பொதுக் கூட்டம் 21-11-94 திங்கட்கிழமை ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதனை பொதுச்சபை பிரதிநிதிகள் மற்றும் யாவருக்கும் அறியத்தருகின்றோம்;

[10023] -கௌரவ செயலாளர்


இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம்ஆண்டு நவம்பர் மாதம் 9 ஆந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது